RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s148

# பெண்ணிய நோக்கில் தி. ஜானகிராமனின் 'உயிர்த்தேன்' புதினம்

**சு. வினோத் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626124, தமிழ்நாடு, இந்தியா.

# T. Janakiraman's 'Uyirthen' Novel in Feminism View

**S. Vinodh [a, *]**

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi-626124, Tamil Nadu, India

* Corresponding Author: vinodh_ts245@anjaconline.org

Received: 25-12-2021
Revised: 03-09-2022
Accepted: 18-09-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Feminism has branched out into a three-way approach to the concept of time. Despite the fundamental differences of opinion, the generality can also be seen in the feminist genres that developed into the three divisions of thought. Equality feminism appeared when the inadequacy of moderate feminism was realized. Extremist feminism and its consequent extreme feminism have emerged in the world as a result of the inadequacy of Egalitarian feminism. Today we can see that there is a tendency for women to choose one feminine genre as a thought-provoking guide for their life and ignore the other based on the land, family, social environment, education and economic status. In the pulsating literature of the community, one can find the people of that community and their thoughts. Feminist thought can also be seen in the works of T. Janakiraman, who creates female characters with the power of strength. The purpose of this article is to examine T. Janakiraman's novel 'Survived' by Feminist Thoughts. In T. Janakiraman 's novels, women are portrayed as a powerful personality. There are three types of feminism: T. Janakiraman; Sengamma, Renganayaki and Anusuya can be compared to the three characters in the novel 'Uyirthen'. This comparison will help us to identify the thinking resources of the three-fold feminism, to focus on the creative technique of the female characters and the social value of the woman.

**Keywords:** T. Janakiraman, Feminism, Novel, Uyirthen, Female Character, Characters

## முன்னுரை

சமூகத்தின் நாடித்துடிப்பாக அமையும் இலக்கியங்களில் அச்சமூகத்தின் மனிதர்களையும் அவர்தம் சிந்தனைகளையும் காணலாம். பெண்பாத்திரங்களை வலிமையுடன் படைக்கும் தி. ஜானகிராமனின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனையும் வலிமையுடன் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. அவ்வகையில் தி. ஜாவின் 'உயிர்த்தேன்' புதினத்தைப் பெண்ணியச் சிந்தனை வகைகள் வழி நோக்குவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

புதினங்களில் பெண்மாந்தர்கள் வலிமைமிக்க ஆளுமையாளர்களாகப் படைக்கப்பெற்றுள்ளனர். மூன்று வகைப் பெண்ணியச் சிந்தனைகளை தி. ஜானகிராமனின் 'உயிர்த்தேன்' புதினத்தில் இடம்பெற்றுள்ள செங்கம்மா, ரெங்கநாயகி, அனுசூயா ஆகிய மூன்று கதைப் பாத்திரங்களுடன் பொருத்தி ஆராய்முடியும். முப்பிரிவுப் பெண்ணியத்தின் சிந்தனை வளத்தையும், பெண் பாத்திரங்களின் படைப்பாக்க நுட்பத்தையும் பெண்ணின் சமூக மதிப்பினையும் இனம்காண இவ் ஒப்பீடு துணைபுரியும் (Janakiraman, 1994).

## உயிர்த்தேன்

நகரத்தில் நல்லநிலையில் தான் நடத்திய காகித வியாபாரத்தைக் விட்டுவிட்டு பூர்வீக கிராமமான ஆறுகட்டிக்குத் திரும்பும் பூவராகன் கோயிலை எடுத்துக்கட்டும் பணியில் இறங்குகிறான். கிராமத்துப் பெண்ணான செங்கம்மாவின் உழைப்பும், அழகும், அறிவும், அன்பும் அவனுக்குத் திகைப்பூட்டுகிறது. அவளது அறிவின் தூண்டுதலால் ஊரில் தரிசாகக் கிடந்த நிலங்களில் எல்லாம் விளைச்சலை ஏற்படுத்தி ஊரில் உள்ள அனைவருக்கு உள்ளும் ஒற்றுமையை உருவாக்குகிறான். ஊர் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்கிய செங்கம்மாவை ஊர்பொதுவிற்கான தலைமையை ஏற்கச்செய்கிறான்.

இப்புதினத்தில் செங்கம்மா, அனுசூயா, ரெங்கநாயகி ஆகிய மூன்று பெண்களைத் அழகுறப் படைத்துள்ளார் (Janakiraman, 1994). பூவராகனின் மனைவி ரெங்கநாயகியும், அவனது தோழியான அனுசூயாவும், கிராமத்தில் அவன் சந்தித்த கார்வார் கணேசமூர்த்தி என்பவரின் மனைவியாக உழைப்பு மற்றும் அன்பின் வடிவமாக வரும் செங்கம்மாவும் பெண்ணிய வகைமையின் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றனர். எனினும் அம்மூன்று வகையிலும் வேறுபட்ட புதிய வமைமைப் பாத்திரங்களாகவும் திகழ்கின்றனர்.

## மிதவாதப் பெண்ணியம்

மரபை மீற முயற்சிக்காமல் பெண்வாழ்வில் முன்னேற்றம் காண்பது என்ற இலட்சியக் கனவை முன்வைப்பது மிதவாதப் பெண்ணியம் ஆகும். “சமுதாயத்தில் காலங்காலமாக நிலைத்துப்போன மரபுவழி நிறுவனங்களையும் மதிப்பீடுகளையும் பெரிய மாறுதல்களுக்கு உட்படுத்தாமல் அதே வேளையில் பெண்ணின் நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டது மிதவாதப் பெண்ணியம்.” என்பார். இத்தகையைப் பெண்ணியச் சிந்தனை வழிப்பட்ட கதாபாத்திரமாக உயிர்த்தேன் புதினத்தில் வரும் பூவராகனின் மனைவி ரெங்கநாயகி திகழ்கின்றார் (Sucilaa, 2001).

## ரங்கநாயகி

ரங்கநாயகி தனது கணவன் பூவராகன் மீது தூய அன்புகொண்டவளாகவும் ஊர் அரசியலில் விருப்பம் அற்றவளாகவும் விளங்குகின்றாள். பூவராகனால் எந்தவிதமான அடக்குமுறைகளுக்கும் அதிகார ஒடுக்குமுறைகளுக்கும் ஆளாகாமல் அதே நேரத்தில் சமூகம் கற்பித்த மரபு மதிப்புகளில் இருந்து வெளிவர விரும்பாத பெண்ணாக ரெங்கநாயகி விளங்குகிறார்.

ஆலோசனைகளால் வழிகாட்டி ஊரை மேம்படுத்திய செங்கம்மாவை ஊர்ப் பொதுவிற்குத் தலைமை ஏற்கச் செய்த பூவராகன், செங்கம்மாள் படித்து இருந்தால் இன்னும் பெரிய மாற்றத்தை நிகழ்த்தியிருக்க முடியும் என்று கூறும்பொழுது, அவனது மனைவி ரங்கநாயகி,

“படிச்சுப்பிட்டு எப்படியெல்லாம் லோல்படும்னு மனசிலேயாவது நினைச்சுப் பார்க்கணும் போல இருக்காக்கும் உங்களுக்கு? படிச்ச பொம்பளைக்கு இது என்ன குறைஞ்சு போயிடுத்து? அனுசூயா படிச்சுப்புட்டு உலகத்தைக் காப்பாத்த கிளம்பிடலியே. அவளும் வீட்டோடதானே இருக்கிறா! அந்த மாதிரிதான் இதுவும் இருக்கணும்னு நினைக்கப்படாதா படிச்சிட்டு வந்தாலும்?” என்கிறாள் (Janakiraman, 1994).

படித்ததனால் பெண்கள் துன்பம் அடைவார்கள் என்றும் அப்படியே படித்தாலும் சும்மா இருப்பதே சரியானது என்றும் கருத்துப்பட ரங்கநாயகியின் பேச்சு அமைந்திருப்பதைக் காணலாம். பூவராகனால் ஆதிக்கம் செலுத்தப்படாத நிலையிலும், பெண் உரிமைகள் பற்றிய தோடலும் போராட்டமும் இல்லாத பெண்ணாக ரங்கநாயகி திகழ்கின்றாள். மரபைப் போற்றும் பெண்ணாக கணவனிடம் தனக்கான சலுகைகளைப் பெற்று மகிழ்பவளாக விளங்குகின்றாள். பெண்ணியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடும் மிதவாதப் பெண்ணியத்தின் காட்சி மாதிரியாக ரெங்கநாயகி திகழ்கின்றாள்.

## சமத்துவப் பெண்ணியம்

மரபுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் ஆண் பெண் வேறுபாடற்ற சமத்துவம் கோருகின்ற தன்மையையும் சமத்துவப் பெண்ணியம் நோக்கமாகக் கொண்டு இயங்குகிறது. ஆண் ஆதிக்கத்திற்கு எதிரான குரலையும் முன்வைக்கிறது. குடும்பம் உள்ளிட்ட நிறுவனங்களை உடைத்து சிதைப்பதை விரும்பாத தன்மை சமத்துவப் பெண்ணியச் சிந்தனையாளர்களிடம் உள்ளது.

"திருமண - குடும்ப உறவுகள், பரஸ்பர நட்பு, மரியாதை, புரிந்துகொள்ளுதல், விட்டுக்கொடுத்தல் முதலிய நற்பண்புகளின் அடிப்படையில் அமையாமல் ஆண் செலுத்தும் மேலாதிக்கத்தின் அடிப்படையில் அமையும் போது குடும்ப நிறுவனத்தில் சமத்துவமின்மை ஏற்படுகிறது. இத்தகைய சமத்துவத்தை முன்வைத்து இயங்குவது சமத்துவப் பெண்ணியம் ஆகும் (Sucilaa, 2001).

'உயிர்த்தேன்' புதினத்தில் வரும் செங்கம்மா அவளது கணவனான கணேசமூர்த்தி இடையிலான குடும்ப உறவு பரஸ்பர நட்பு, மரியாதை, புரிந்துகொள்ளுதல், விட்டுக்கொடுத்தல் ஆகிய பண்புகளின் அடைப்படையில் திகழக்காணலாம். குடும்ப நிறுவனத்தில் ஆண் பெண் சமத்துவத்தை உணர்த்தும் வகையிலேயே செங்கம்மா - கணேசமூர்த்தியைப் படைத்துக்காட்டுகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது (Janakiraman, 1994).

## செங்கம்மா

புதினங்களில் பெண்பாத்திரங்கள் வலிமை மிக்க தன் ஆளுமையால் ஆண்பாத்திரங்களை இயக்குபவர்களாத் திகழ்கின்றனர் (Janakiraman, 1994). உயிர்த்தேன் புதினத்தில் வரும் செங்கம்மாவைத் தாய்த்தெய்வத்திற்கு நிகராக ஜானகிராமன் உயர்த்துகின்றார். ஆதிப் பெண்வழிச் சமூகத்தின் மீட்டுருவாக்கம் போல் பெண் முதன்மையைப் பார்க்கமுடியும். சிலப்பதிகாரத்தில் கண்ணகியை இளங்கோவடிகள் தெய்வநிலைக்கு உயர்த்தி யாவரையும் தொழச்செய்வது போல் செங்கம்மாவைப் படைத்துள்ளார். ஊரில் உள்ள அனைவரும் அவளை மனதால் வழிபடுகின்றனர். அழுக்கை நீக்கும் நெருப்பாக காட்டப்படும் செங்கம்மாவின் அருள் நெருப்பில் எரிந்து கரையும் அழுக்காக பழனிவேலு அழிகின்றான்.

கார்வார் கணேச மூர்த்தியின் இரண்டாம் மனைவியான செங்கம்மா ஊர் மக்களின் பொருத்தமற்ற இணைகளாகப் பார்க்கப்படுகின்றாள். ஆனால் தன் கணவன் குறித்தும் வாழ்க்கை குறித்தும் செங்கம்மாவிற்கு எந்த வருத்தமும் இல்லை. கணவனின் நம்பிக்கையைப் பெற்றவளாகவும் பூவராகனின் மூலம் ஊரைப் புதுப்பிக்கும் செயல்புரிபவளாகவும் செயல்படுகின்றாள். பூவராகனின் மதிப்பில் உயர்ந்து பின்னர் ஊர் மக்களின் மதிப்பிலும் உயர்கின்றாள்.

"ஊரிலே ஒரு நல்லது - கெட்டது எது நடந்தாலும் சரி, இது இல்லாம எதுவும் நடக்கறதில்லே. ஒரு நரை, ஒரு குறை, ஒரு மூளி இராது செங்கம்மா போனா" என்று புதினத்தின் தொடக்கத்தில் நரசிம்மன் செங்கம்மாவைப் பற்றி பூவராகனிடம் அறிமுகம் செய்யும் பொழுது உழைப்பின் வடிவமாக அடையாளப்படுத்துகின்றான் (Janakiraman, 1994).

"இப்படி ஒருத்தர் இருக்கிறபோது ஊரு எப்படி அழகில்லாமல் இருக்கும்? எல்லாருக்குமா சேர்ந்து இவங்க அழகாக இருக்காங்க. பிறத்தியாருக்கு உழைக்கவே ஜன்மம் எடுத்துதுன்னு சொன்னியே காபி சாப்பிடறப்போ, அப்படின்னா எல்லாருக்குமா சேர்ந்து நல்லவங்களாகவும் இருக்கணும்..." என்று மற்றொரு இடத்தில் பூவராகன் செங்கம்மாவைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (Janakiraman, 1994).

எத்தனை கோயில் இடிஞ்சாலும், எத்தனை பூசல் முளைச்சாலும், எத்தனை நிலம் தரிசானாலும், இது ஒண்ணு இருக்கிறதே போதும். எல்லாத்துக்கும் சரிக்கட்டிடும். நீங்க இவங்க கிட்ட எல்லாத்தையும் ஒப்படைச்சிருந்தா இத்தனை நேரம் எல்லாம் சரியாப் போயிருக்கும்" என்று மேலும், பூவராகன் கூறுகிறான் (Janakiraman, 1994). வீட்டுப் பொறுப்பில் முடக்கியுள்ள பெண்களிடம் ஊர் பொறுப்பை வழங்குவதனால் ஏற்படும் சமூக முன்னேற்றத்தைப் இவ்விடத்தில் பூவராகன் மூலம் முன்வைக்கிறார்.

ஆண் பெண் இடையிலான சமத்துவத்தின் உதாரணமாகவே செங்கம்மாவை படைத்துள்ளார் என்று தோன்றுகிறது.

"பொம்பளையாவது, ஆம்பிளையாவது சமத்தா, கண்டிப்பா, தைரியமா, பிரியமா, காரியம் செய்தாகணும் இதைச் செய்யறவங்க யாரா இருந்தா என்ன?" என்று பூவராகன் செங்கம்மாவை ஊர்ப் பொதுவுக்குத் தலைமை ஏற்கச் சொல்லும் இடத்தில் கூறுகிறார் (Janakiraman, 1994). இது உள்ளத்து வரிகள் என்றே தோன்றுகிறது. பாரதி தன் கவிதையில் அறிவுரையாக கூறிய கருத்துக்களின் வாழ்வியல் உதாரணம் போல் உயிர்த்தேன் புதினத்தில் செங்கம்மா திகழ்கின்றாள்.

"அந்த அம்மாவைச் சுத்தி எப்பவும் ஒரு சந்தோஷம் சுனையிலேர்ந்து ஊற்று நாலு பக்கமும் சுரந்து பரவறாப்போல பரவிக்கிட்டேதான் இருக்கு. கிட்ட இருக்கறவங்க எல்லாரையும் தொத்திக்கும் போலிருக்கு. ஊரு திருந்திக்கிட்டே வருதுன்னா அதிலே ஒண்ணும் ஆச்சரியமில்லை" என்று பூவராகனின் நண்பன் ஆமருவி செங்கம்மாவைப் பற்றிக் கூறுகிறான் (Janakiraman, 1994). இந்த இடத்தில் தெய்வநிலைக்குச் செங்கம்மா உயர்த்தப்படுகிறார்.

பெண்களைப் பாலியல் பண்டமாகப் பார்க்கும் ஆண் பார்வையில் இருந்து மாறுபட்டு பார்க்கப்படுகின்றாள் செங்கம்மா. அமருவியைத் தொடந்து ஊர் ஆண்கள் ஒவ்வொருவரும் மனதில் இதனையே உணந்து உரைக்கின்றனர்.

செங்கம்மா தனக்குள் பேசிக்கொள்ளும் இடத்தில் அவளுக்கும் அவளது கணவன் கணேசமூர்த்திக்கும் இடையிலான வாழ்க்கை மற்றும் கணவனின் மனதில் செங்கம்மாளின் மதிப்பு ஆகியவை வெளிப்படும்படியாக தி. ஜா செய்துள்ளார்.

"நான் நினைக்கிறெதெல்லாம் உன் காதிலே விழுதா என்ன? முதலியார் வீட்டிலே நான் கிடக்கிற கிடையைப் பார்த்து ஊருக்கெல்லாம் கண் அரிக்குது. அன்னிக்கு நான் என்னமோ உளறிக்கிட்டே கிடந்தேன். கும்பாபிஷேகத்துக்கு இப்ப என்ன முடை, ஊரைல்ல கவனிக்கணும்னு, அப்ப நீயும்தான் இருந்தே! உடனே முதலியாரு அதை உடும்புப் பிடியாய்ப் பிடிச்சிக்கிட்டு விடமாட்டேனிட்டாரு. அப்புறம் பொது பொதுன்னு என் தலையிலே 'பொது'வைத் தூக்கி வச்சாரு. அப்ப கூடவா உனக்கு சந்தேகம் வரலே? முதலியாருக்கு நல்ல படிப்பு, சாதாரண அறிவு இல்லை" என்று செங்கம்மா உறங்கும் கணவன் அருகில் அமர்ந்து தனக்குத்தானே பேசிக்கொள்கின்றாள் (Janakiraman, 1994).

உயிர்த்தேன் நாவலின் மையக் கதாபாத்திரமாக உள்ள செங்கம்மாவைச் சமதர்மப் பெண்ணியத்தின் வகைமாதிரியாக படைத்துக்காட்டியுள்ளார் (Janakiraman, 1994).

## திவிரவாதப் பெண்ணியம்

மிதவாதப் பெண்ணியம், சமதாமப் பெண்ணியம் என வளர்ச்சியடைந்த பெண்ணிய சிந்தனைகள் பெண்களிடத்தும் சமூகத்தினிடத்தும் மாற்றங்களை ஏற்படுத்திய சூழலில் அதன் போதாமையை உணர்ந்த பெண்ணியச் சிந்தனையாளர்களில் ஒருபிரிவினர் தீவிரவாதப் பெண்ணியத்தை முன்வைத்தனர்.

"தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) அடித்தளத்திலிருந்து மாறுதல்களை விரும்புகிறது. அடிப்படையே மாறினால்தான் பெண்விடுதலை பெறமுடியும் என்பது இவர்களின் வாதமாகும். சடங்குகளும் மரபுகளும் தகர்த்து எறியப்பட்டால்தான் பெண் விடுதலை பிறக்கும் எனக் கூறுவர்" என்று குறிப்பிடுகின்றார் (Seethalaa, 2007).

இத்தகைய தீவிரப் பெண்ணியத்தின் சாயலில் அனுசூயாவை உயிர்த்தேன் புதினத்தில் படைத்துள்ளார்.

## அனுசூயா

பூவராகனின் தோழியாக கதையில் அனுசூயா அறிமுகமாகின்றாள். செங்கம்மாவைப் பார்த்தவுடன் பூவராகனுக்குத் தோழி அனுசூயா நினைவுக்கு வருகின்றாள். இருவருக்கும் இடையில் ஒற்றுமைகள் பலவும் வேறுபாடுகளும் சிலவும் இருப்பதைப் பூவராகன் நினைவு கொள்கின்றான்.

செங்கம்மா: அனுசூயா இடையே உள்ள வேறுபாடுகளாக கிராமம்: நகரம், திருமணம்: திருமணம்புரியாமை, படிப்பறிவு இன்மை: படிப்பறிவு என இருந்த போதிலும் இருவரும் துணிவும், அன்பும் மிக்கவர்களாக விளங்குகின்றனர்.

“யாரைப் பார்த்தாலும் தொட்டுத் தொட்டு, கையைப் பிடித்துப் பிடித்துப் பேசுகிற ஆத்மா அது ஒன்றுதான். மனிதர்களிடம், உயிர்களிடம் அன்பைக்கொட்டுவதையே ஒரு விரதமாகப் பயிற்சியாகக்கொண்ட ஆத்மா அது. பிரியத்தை எப்படி எல்லாம் காட்டலாம் என்று தவித்துத் திணறிக் கடைசியில் கையையாவது பிடித்துக்கொள்வோம் என்று ஒடுங்கி நிறைவது போலிருக்கும் அனுசூயாவைப் பார்த்தால் என்று பூவராகனின் நினைவில் விரிவடையும் அனுசூயாவைத் அறிமுகம் செய்கின்றார். ஆண், பெண் என்று வேறுபாடு நீங்கிய நிலையில் யாவரையும் தொட்டுப் பேசுவதும், திருமணத்தை மறுத்து வாழ்வதுமாக அனுசூயாவைத் தீவிரவாதப் பெண்ணியத்தின் வெளிப்பாடாக நினைக்கின்ற வகையில் படைத்துள்ளார் (Janakiraman, 1994).

“அனுசூயாவின் உடலிலிருந்து சந்தோசமும் இனிமையும் சுற்றிலும் ஓடுவது போலிருந்தது. அவள் இருக்கிற இடத்தில் வேறு ஒன்றும் இருக்க முடியாது போல் ஓர் எண்ணம் தோன்றிற்று. ஏன் என்று புரியவில்லை. அந்த முகத்தாலா, பேச்சினாலா, இழுத்து இழுத்து எதையும் அணைத்துக்கொள்ளும் பசையாலா?” என்று அனுசூயாவைப் பார்க்கும் செங்கம்மாவிடம் எண்ண ஓட்டம் நிகழ்கிறது (Janakiraman, 1994).

பெண் உரிமை குறித்தும் பெண் சுதந்திரம் குறித்தும் தெளிந்த கருத்துடையவளாக அனுசூயா விளங்குகின்றாள். செங்கம்மா அனுசூயாவிடம் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதன் காரணம் கேட்கின்றாள். திருமணம் எதற்கு என்கின்றாள் அனுசூயா. அதற்கு செங்கம்மா “கெட்டுப் போகாம இருக்கிறதுக்கு” என்கின்றாள் (Janakiraman, 1994). அதற்கு அனுசூயா, “கெட்டுப்போகாமா இருக்க, கல்யாணம்! சந்தோஷமா இருக்கிறதுக்கு இல்லே” என்பதாக பதில் வினாவை முன்வைக்கின்றாள். இந்த உரையாடல் மூலம் பெண் வாழ்வின் முடிவெடுக்கும் உரிமை குறித்து அனுசூயாவிடமிருந்து செங்கம்மா அறிந்துகொள்கின்றாள்.

“ஒருத்தனுக்குக் கட்டுப்பட்டு, ஒருத்தனே எல்லாமா இருக்கற பொம்பளைங்கதான் சுத்தமான ஆத்மாங்கன்னு நினைச்சிட்டிருந்தேன். ஆனா பூ அன்னிக்கு மத்தியானம் சொன்னப்புறம் நீதான் ஸ்படிகம் மாதிரி சுத்தமான ஆத்மான்னு எனக்கு உணர்க்கை வந்தது” என்று செங்கம்மா அனுசூயாவை வியந்து பேசுகின்றாள் (Janakiraman, 1994). இவ்விருவர் இடையே நிகழும் உரையாடல் வழி ஒரு பெண் மற்றொரு பெண்ணைத் தாழ்த்துகின்ற வகையில் செயல்படுவதற்கு மாறாகப் புரிந்துகொள்வதும் ஒற்றுமைகொள்வதும் அவசியம் என்பது வலியுறுத்தப்பெறுகிறது.

“மத்தவங்க என்னை ஏதோ விலைப்பண்டம்னு நினைக்கிறதுக்காக நான் என்னை மாத்திக்கிட்டு இருக்கணும்னு நினைச்சதில்லை. எனக்கு என் இஷ்டப்படி இருக்கணும். சரீர உறவு ரொம்ப சாதாரண விஷயம். வித்தியாசம் பாராட்டாம எல்லார் கிட்டவும் அன்பாயிருக்கிறதுதான் சிரமம். எனக்குஉலகம் முழுக்க அணைச்சுத் தழுவி பிரவாகமா ஓடணும் போலிருக்கு” என்று அனுசூயா கூறும்பொழுது தனித்திருக்கும் பெண்ணை உலகம் பார்க்கும் பார்வை சுட்டப்படுகிறது (Janakiraman, 1994). அதனையும் கடந்து அன்பால் அனைவரையும் நேசிப்பவளாக அனுசூயா திகழ்கின்றாள். ஆணை வெறுக்கின்ற தீவிரவாதப் பெண்ணியத்திருந்து மாறுபட்டு யாவரையும் நேசிக்கின்ற பெண்ணாக அனுசூயா திகழ்வதைக் காணமுடிகிறது.

தீவிரவாதப் பெண்ணிய வகை மாதிரி போல் எண்ண இடம்தரும் அனுசூயா அப்பெண்ணியத்திருந்து வேறுபட்டவளாக அதே நேரத்தில் மிதவாத, சோஷியலிச பெண்ணியத்திற்குள் அடங்காத புதுமைக் கருத்துக்கள் கொண்டவளாகத் திகழ்கின்றாள். தீவிரவாதப் பெண்ணியத்திலிருந்து

அதிதீவிரப் பெண்ணியம் தோன்றியது என்பர். அனுசூயா பாத்திரம் மூலம் வெளிப்படும் சிந்தனையை மித தீவிரவாதப் பெண்ணியம் என்று குறிப்பிடலாம்.

"இஷ்டப்படி ஒருவருக்கு இருக்கமுடிகிறதென்றால் அதற்கு எத்தனை கொடுத்து வைத்திருக்கவேண்டும்? எத்தனை பயப்படாத் தனம் இருக்க வேண்டும்?" என்று அனுசூயாவை செங்கம்மா வியக்கின்றாள்.

உயிர்த்தேன் புதினத்தில் பெண்ணியம் என்பது பிரச்சாரமாக அல்லாமல் பெண்மாந்தர் ஒருவர் வாழ்க்கை வழியாக மற்றொருவர் கற்றுக்கொள்ளும் வாழ்க்கைப் பாடமாகவும் அமைந்துள்ளன. அனுசூயாவின் வாழ்க்கை வழியாக செங்கம்மா பெண் விடுதலை குறித்து அறிந்துகொள்கின்றாள்.

## முடிவுரை

பெண்ணியம் சமூக மாற்றத்திற்கான புறச்செயல்பாடு மட்டுமல்ல பெண்களுக்கான அகச்செயல்பாடும் ஆகும். அவ்வகையில், உயிர்த்தேன் புதினத்தில் வரும் பெண் பாத்திரங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்கிறார்கள். ஒற்றுமையாக செயல்படுகிறார்கள். மற்றவர்களிடம் அன்புகாட்டுகிறார்கள். பெண்ணியத்தின் வகைமாதிரிகளாக செங்கம்மா, ரெங்கநாயகி, அனுசூயா ஆகியோர் உயிர்த்தேன் புதினத்தில் படைக்கப்பட்டுள்ளனர். எனினும் பெண்ணிய வகைமைகளைக் கடந்த புது வகைமைகளாகத் திகழ்கின்றனர். வாழும் சூழல், குடும்பப்பின்னணி, கற்ற கல்வி போன்ற காரணங்களால் ஒவ்வொரு பெண் வாழ்வையும் ஒரு தனிப் பெண்ணிய வகைச் சிந்தகையாகக் கருதுவதே பொருத்தமுடையது.

## References

Janakiraman, T. (1994) Uyirthen, Ainthinai pathippagam, Chennai, India.

Seethalaa Siva, (2007) Penniyam, Jeyamani veliyeedu, Chennai, India.

Sucilaa, M.A. (2001) Pen ilakkiyam vasippu, Meenakshi Book Shop, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License